உ

கடவுள் துணை.

திரிசிரபுரம் - உத்திரதிசை
காவேரியின் மத்தியில்
திருவானைக்காவென்னும் அப்புஸ்தலத்தில்
திருக்கோயிற்கொண்டெழுந்தருளி
யிராநின்ற ஜம்புலிங்கமென்னும்
சிவபெருமா னிடப்பாகம்பெற்ற

# அகிலாண்டேஸ்வரி பதிகம்

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதறாஸ் என். சி.

1914.

உ

கடவுள் துணை.

# அகிலாண்டேஸ்வரிபதிகம்.

தொல்லையோவுந்தனுக்குத் தோன்றிலையோவென்கவலை
இல்லையோதெய்வ மிருந்தாலிரங்காதோ
முல்லையுடன்வ்ல்வவன முத்திதருஞ் சம்புலிங்கச்
செல்வரைப்பூசித்தத் தேவிவகிலாண்டவளே. (௧)

ஆருடனேசொல்லி யழுவேன்முறையிடுவேன்
சீருடனேவாழ்வார் சிரிப்பார்முகம்பாரார்
வீருடனேசென்றவரை வெட்டித்தரித்திடுவை
காருடனேநின்ற காவுவகிலாண்டவளே. (௨)

வையஞ்சலிக்க மனஞ்சலிக்கயான்சலிக்க
மெய்யுஞ்சலிக்க விதிசலிக்கமதிசலிக்க [ரை
பொய்யுஞ்சலிக்க வுன்னைபோற்றினின்றேன்றுண்மல
சையுஞ்சலித்து தம்மாகாவு வகிலாண்டவளே. (௩)

வார்த்தைக்கோகீர்த்திக்கோ மண்மேற்பிறந்ததும்
ஆத்துச்சூட்கோரை யலைவதுபோலாவேனோ

சோர்த்துக்கோநின்றடிமை செனனமினிநீக்கி
காத்துக்கோநெல்வயல்சூழ் காவுவகிலாண்டவளே. (௪)

ஆனாலுமென்றுயர மலைக - விற்றாரும்பதுபோல்
தானுகயென்னுமெண்ணந் தாயேநீயறியாயோ
மீனுனமாயன்சகோதரியோ சுந்தரியே
தேனூறும்சம்புலிங்கர் தேவியகிலாண்டவளே. (௫)

தாமறையின்றண்ணீர்போற் றயங்கிமனமேகலங்கி
யேமாந்துநானிருக்க விதிஞாயமோதாயே
காமன்றனைக்காய்ந்து கரியுரித்தோனிடமமர்ந்த
கோமளமேகாவுவளர் கோதையகிலாண்டவளே. (௬)

போதுக்குப்போதுமனம் புண்ணாகிஎண்ணியெண்ணி
யேதுக்குவீணனுக்கு விந்தவிதிவந்ததம்மா
மாதுக்குள்மாதடியாள் வாய்விட்டழுதகுரல்
காதுக்குக்கேட்கிலையோ காவுவகிலாண்டவளே. (௭)

நாட்டிலேசென்மித்து நானொருபெண்பட்டசலம்
யேட்டிலடக்கி யெழுதப்படாது அம்மா
வாட்டிக்கொடுங்காலன் வலைவீசும்போதிலென்னை
காட்டிக்கொடாதேயம்மா காவுவகிலாண்டவளே. (௮)

அருமையோயென்கவலை யாற்றுவதுனக்கரிதோ
தெரியாமற்கற்சிலையைத் தெய்வமென்றுநம்பினனோ
பரியாயநோக்கிப் பலனுதவுவாயெளிய
கரியோனைப்பெற்றெடுத்த காவுவகிலாண்டவளே (கூ)

உன்னைவிடவேறெனக்கிங்குற்றதுணை வேறுமுண்டோ
இன்னிலத்தில்வாடி யிருப்பதுனக்கழகோ
பன்னரியவேதப் பழம்பொருளேபங்கயத்தி
னன்னமேதென்காவு வாழுமகிலாண்டவளே. (ய)

விரிஞ்சன்முதல்தேவர்களு மேலானபொன்னுலகு
மரியபலவுயிரனைத்து மாக்கியளித்தருளு
மிரவியேஞான விளக்கேயெழிலமுத
வரிவையேகாவுவள ரம்பையகிலாண்டவளே. (கக)

மக்கள்கல்விப்பொருளில் வல்லவராகிப்புவியில்
மிக்கபுகழடைந்து மேவுவதுநின்மகிமை
சொக்கப்பசுங்கிளியே சோதியேகொன்றையுட
னக்கரவம்பூண்டவரபா லமர்ந்தவகிலாண்டவளே. (கஉ)

அகிலாண்டீஸ்வரி பதிகம்

முற்றிற்று.

———

உ

சிவமயம்.

# திருவானைக்காவின்

## திவ்விய சரித்திரம்.

சோழநாட்டின்கண் ணிராநின்ற திரிசிரபுரம் காவேரிநதியின் மத்தியிலிருக்குஞ் சந்திர புஷ்கரணிக்கு அடுத்திருந்த ஒருவனத்தில் வெண்ணாவல் மரத்தின்கீழ் சுயம்புமூர்த்தியாய் விளங்காநின்ற சிவலிங்கப்பெருமானுக்கு அந்தவனத்தில் சஞ்சரித்த ஒருயானையானது பூர்வபுண்ணிய வசத்தினால் நாடோறும் பூசைசெய்துகொண்டிருந்த காரணத்தினால் அந்தவனத்துக்குத் திருவானைக்காவென்று பெயருண்டாகியது அப்படியிருக்க முன்செய்த தவக்குறையினால் ஒரு சிலந்திப்பூச்சியானது சிவனேசங்கொண்டு அந்தச் சிவலிங்கப்பெருமான் திருமேனியில் சருகுதிரா வண்ணம் மேல்விமானங் கட்டியது போலத் தன்வாய்நூலின் கூடுகட்டி யிருந்தது மறுநாள் பூசைசெய்யவந்தயானை அதனைக்கண்டு இது அனுச்சிதமென்று சிதைத்துவிட்டது சிலந்தியானது மறுபடியும் அவ்வாறே செய்திருக்க யானை மறுநாளும் அதனைச் சிதைத்துவிட்டது சிலந்தியானது சிவலிங்கப்பெருமானு

டைய திருமேனியின்மேல் சருகுவிழாவண்ணம் நான் செய்திருப்பதை யிந்த யானை அடிக்கடி சிதைத்துவிட லாமோவென்று அதனது துதிக்கையுள் நுழைந்தது கடித்தளவில் யானையானது தன் துதிக்கையைநிலத்தில்மோதி இறக்கச் சிலந்தியுமிறந்தது அப்போது பரமசிவம் யானைக்குப் பதவிகொடுத்துச் சிலந்தியைப்பார்த்துசோழர்குலத்திற்பிறந்து அரசாட்சிசெய்யும்படி திருவருள் செய்திட அந்தச்சிலந்தியானதுசுபதேவனென்னும்சோழராஜனுடைய மனைவியாகிய கமலவதிதிருவயற்றில்சிசுவாய்த்தங்கிப் பத்துமாதமும் நிறைந்து புத்திரனுயவதரிக்குஞ் சமயத்தில் இன்னமும் ஒருநாழிகைக்கழித்துஇந்தக்குழந்தைபிறக்குமாகில்திரிலோகங்களையும்ஆளுமென்றுசோதிடர்கள்சொல்ல அப்படியானுல் அந்த ஒருநாழிகைவரைக்கும் தன்னிரண்டுகாலையும் மேலே தூக்கிக் கட்டிவையுங்களென்றுகமலவதிசொல்ல அவ்வாறேசெய்துமேற்சொல்லியகாலம்வந்தபோது அக்கட்டினை அவித்துவிடக் கமலவதி குழந்தையைப் பெற்றெடுத்து என் கோச்செங்கண்ணனே வென்று சொல்லி உடனே உயிர்நீங்கினள் பின்பு சுபதேவனென்னும் அந்தச் சோழராஜன் தன்புத்திரனுகிய அந்தக்குழந்தையை வளர்த்து

சகல சாஸ்திரங்களையும் கற்பித்து மகுடாபிஷேகஞ்செய்து தானதவமியற்றிச் சிவலோகஞ்சேர்ந்தனன் கோச்செங்கட்சோழன் பரமசிவத்தினருளால் முன்பிறப்பையறிந்து அரசாட்சி செய்யும்போது பரமசிவத்துக்கு பெரிய ஆலயம் சமைக்கவேண்டு மென்கிற தொண்டுபூண்டு தாம்ஆதியில் திருவானைக்காவில்செய்ததொண்டின் செயலையுணர்ந்து அங்கிருக்கும் வெண்ணாவல் மரத்தையுள்ளமைத்துச் சிவாலயம் கட்டித் திருத்தொண்டு செய்து சிவலிங்கப் பெருமான் உமையவள் சமேதராகும் பொருட்டு இரவும் பகலும் நித்திரை அன்னாகாரம் இல்லாமல்வருந்திய சோழருடைய பத்தி வைராக்கியத்துக்கு அகண்டபரிபூரண சச்சிதானந்த அகிலபுவனமும் நிறைந்த சத்திவடிவாகிய பார்வதி தேவியார் மனதிறங்கித் திருவானைக்காவாகிய திவ்வியஸ்தலத்தின்கண்சோழருக்குமுன்பு பிரசன்னமாகி உனகருவேண்டும்வரம் என்னவென்றுகேழ்க்கத் தாயே இத்தலமும் காவேரியும்சிறப்பும்பெரும்படி இவ்விடம் சிவபெருமான் அருகில் வசிக்கவேணுமென்று வேண்டும் வரத்துக்கு மகிழ்ந்து அவ்விடம் சிவபெருமான் உத்தரவுக்கு அம்மன்தவத்திலிருந்த அத்தவத்துக்கிரங்கி வெண்ணாவலிலமர்ந்த ஜம்புகேஸ்வரர்தரிசனமாகி அகிலாண்டநாயகியென்று சிவபெரு

மான் அழைத்து இத்தலப்பெருமை பெறும்படி நாம்வ சித்தவிடத்திலே நீயும் இருப்பாயாகவென்றும் கலியுக தர்மம் உன்னால்நிறைவேற்றுவாயென்றும் அருளியதின் பேரில் நிலையானவடிவாய் அவ்விடமே திருக்கோயிற் பெற்றிருந்த அகிலாண்டவல்லி கிருபையால் கோச்செ ங்கட் சோழரும் பதவியடைந்தனர் அதின்மகத்துவமு திருவானைக்கா ஸ்தலபுராணத்தின்மூலமாய் அறிக அது முதல் இக்கலியுககாலத்திலும் பத்தியுள்ளமானிடர்களு க்கு நனவிலும் கனவிலும் பிரசன்னமாகி அநேகவரங்க ளைக்கொடுத்து இடர்களைத் தீர்த்தருளிய அகிலாண்டவ ல்லியை யென் பொல்லா வியாதியாலும் வறுமையாலும் என்வாயில்வந்ததை வரகவியாக உளரி சவுக்கியத்தைப் பெற்றுக்கொண்டபடியால் யாதாமொருவர் பத்தியுடன் பணிந்து கோயில் வலம்வந்து சிரம் முகம் கைகால் அங் கம் பூமியினிடம்படியும்படி தொண்டுசெய்து அர்ச்சித்த பேர்களுக்கு யெண்ணிய யெண்ணம் கைவல்லியப் படு மெனவறிக.

திருவானைக்கா திவ்வியசரித்திரம்

முற்றிற்று.

---